අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/04/60/01/වා.ස්.මා - 2025
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }
දිනය / திகதி / Date } 2025.12.

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

அனைத்து தேசிய பாடசாலை அதிபர்கள்

**<u>இலங்கை அதிபர் சேவை அதிகாரிகளின் வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துதல் - 2025</u>**

இலங்கை அதிபர் சேவை அதிகாரிகளின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் தொடர்பாக 2025.02.28 ஆம் திகதிய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 12/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன், அவ்வருடாந்த இடமாற்ற குழுவின் ஆம்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டு அக்கட்டளைகளை 2026.01.01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் கல்வி அமைச்சின் வலைத்தளத்தின் (http:/www/moe.gov.lk ) ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

02. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 12/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி பின்வருமாறு அதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

- 2024.12.31 நிலவரப்படி 06 ஆண்டுகளுக்கும் மேலான சேவைக் காலத்தைக் கொண்ட, இணையவழி முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அதிகாரிகள்
- 2024.12.31 நிலவரப்படி 06 ஆண்டுகளுக்கும் மேலான சேவைக் காலத்தைக் கொண்ட, இணையவழி முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத அதிகாரிகள்
- 2024.12.31 நிலவரப்படி 03 முதல் 06 ஆண்டுகள் வரையிலான சேவைக் காலத்தைக் கொண்ட இணையவழி முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அதிகாரிகள்

03. மேற்படி அதிகாரிகளின் இடமாற்றத்தின் போது, DMS/0039/NSC- III மற்றும் 2024.02.19 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் தரவரிசை அதிகாரிகளின் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களை கணக்கிட்டுள்ளதுடன், (இணைப்பு 01) 2025.12.31 ஆம் திகதிவரையில் ஓய்வு பெறுவதின் அடிப்படையில் ஏற்படும் வெற்றிடங்களையும் கருத்திற்கொண்டு இடமாற்றங்கள் தொடர்பான பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

04. அதன் பிரகாரம் உரிய பாடசாலைகளின் வெறறிடங்கள் அடிப்படையில் இடமாற்றங்கள் தொடர்பாக,

- வருடாந்த இடமாற்றக் குழு கவனம் செலுத்தப்படாத பட்சத்தில்
- இடமாற்ற நடைமுறைக்கு மாறாக இடமாற்றம் வழங்கப்படடிருப்பின் அல்லது
- இடமாற்ற விண்ணப்ப திகதி மற்றும் இடமாற்ற முன்மொழிவு வெளியிடப்பட்ட திகதிக்கும் இடையிலான காலகட்டத்தில் விசேட அல்லது மிகவும் கடுமையான தனிப்பட்ட சிரமங்கள் எழுந்துள்ளன.என்பதற்கான விடயங்களை சமர்ப்பிக்கும் அலுவலர்களுக்கு மாத்திரம் மேன்முறையீடுகளை முனவைக்க முடியும்.

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk moesecretaryoffice@gmail.com

05. மேன்முறையீட்டு விண்ணப்பப் படிவத்தின் மாதிரி (இணைப்பு 02) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அந்த, படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட மேனமுறையீட்டை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உறுதிசெய்யப்பட கூடிய ஏனைய தகவல்களை உரிய அதிகாரிகளின் பரிந்துரையுடன் (Scan) செய்து PDF பிரதியாக atslps2025@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக 2025.12.15 மதியம் 12.00 மணிக்கு முன்னதாக எனக்கு முன்னிலைப்படுத்துமாறு அறியத்தருகிறேன். இடமாற்ற ஆவணத்தில் தொடர்புடைய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தொடர் இலக்கத்தை மேன்முறையீட்டு விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிடவேண்டியதுடன், அந்த இலக்கத்தை மின்னஞுசல் தலைப்பின் கீழேயும் (Subject) குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் கிடைக்கும் மேன்முறையீடுகளை மீளாய்வு செய்யப்படமாட்டாது என்பதனை மயவுடன் அறியத்தருகிறேன

06. அதிகாரிகளினால் மேனள்முறையீடு செய்யப்படாவிட்டால் தற்போதைய பணியிடத்திலிருந்து முறையாக விடுவிக்கப்பட்டு, இடமாற்றம் அமுலுக்கு வரும் 2026.01.01ஆம் திகதியன்று புதிய பணியிடத்தில் கடமைகளை பொறுப்பேற்று அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் மூலமாக இந்த அமைச்சின் அதிபர் கிளைக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

07. பாடசாலையில் பணிபுரியும் இடமாற்றம் வழங்கப்பட்ட அதிகாரிகள், பதிலீட்டார்கள் வரும் வரை தக்கவைக்கப்படாமல் குறிப்பிட்ட திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைகளை பொறுப்பேற்றுவதற்கு ஏதுவாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி தயவுடன் அறியத்தருகிறேன்.

நாலக்க கலுவெவ
செயலாளர்